## அரசின் திட்டங்களை மக்களிடம் சேர்க்க

# ‘திராவிட மாடல்’ அரசின் தூதுவர்களாகச் செயல்பட வேண்டும்!

## வேலூரில் நடைபெற்ற திருமண விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**வேலூர்,ஜூலை 4-**

**வேலூர் மாவட்டம், காட்பாடி வடக்குப் பகுதி கழகச் செயலாளர் வன்னியராஜா மற்றும் வேலூர் மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் புஷ்பலதா வன்னியராஜா ஆகியோரின் மகள் விஷ்ணுபிரியா - சுரேஷ்குமார் இணையரின் திருமணத்தை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் நடத்தி வைத்தார்.**

**அப்போது அவர், ‘திராவிட மாடல் அரசின் தூதுவர்களாக செயல்பட்டு, அரசின் திட்டங்களை மக்களிடம் சேர்க்க வேண்டும் பேசினார்.**

வேலூர் மாவட்டம், காட்பாடி வடக்குப் பகுதியின் செயலாளர் வன்னிராஜா அவர்களின் அன்பு மகள் விஷ்ணுபிரியா - சுரேஷ்குமார் இணையரின் திருமணத்தை உங்கள் முன்னிலையில் நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். எத்தனையோ முறை இந்த காட்பாடிக்கு வருகை தந்துள்ளேன். எனது அரசியல் வாழ்விற்கு அடித்தளமிட்டு, பிள்ளையார் சுழி போட்டது என்றால், அது காட்பாடி தொகுதிதான். அந்த விதத்தில், இன்றைக்கு மீண்டும் வருகை தந்துள்ளதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### பெருமைமிகு காட்பாடி

அதுமட்டுமல்ல, இந்த காட்பாடி தொகுதிதான் நம் கழகத்தின் பொதுச் செயலாளரை தந்திருக்கின்ற மண். அப்படிபட்ட பெருமை மிகுந்த இந்த காட்பாடிக்கு வருகை தந்து உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன்.

நேற்று இரவில் இருந்து சிறப்பான வரவேற்பை அளித்த வேலூர் மற்றும் இராணிபேட்டை மாவட்ட, மாநகர கழகத்தைச் சேர்ந்த அத்தனைப்பேர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அண்ணன் வன்னிராஜாவைப் பொறுத்த வரை 1984-லிருந்து கழகத்திற்காகத் தொடர்ந்து உழைத்து வருகிறார். 2003- ஆம் ஆண்டு முதல் 2014-ஆம் ஆண்டு வரை தாராபடவேடு செயலாளர் பொறுப்பில் இருந்து, சிறப்பாக கழகப் பணியும், மக்கள் பணியும் ஆற்றியவர். அதன் பிறகு, தற்பொழுது வரை பகுதிக் கழகச் செயலாளராக கழகத்திற்காக உழைத்து வருகிறார்.

### சிறப்பாக மக்கள் பணி

அண்ணன் கழகப் பணி ஆற்றுகின்ற அதே நேரத்தில், அவரின் துணைவியார் அக்கா புஷ்பலதா அவர்கள் வேலூர் மாநகராட்சியின் மண்டலக்குழுத் தலைவராக சிறப்பாக மக்கள் பணியும், கழகப் பணியும் ஆற்றி வருகிறார். இப்படிப்பட்ட ஒரு கழகக் குடும்பத்தின் திருமணத்தில் கலந்துகொண்டு, மணமக்களை வாழ்த்துகின்ற வாய்ப்பை அளித்ததற்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.7.2025) திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேலூர் மாவட்டம் காட்பாடி வடக்கு பகுதி செயலாளர் ஜி.வன்னியராஜா மகள் வ.விஷ்ணுபிரியா – ஹெச்.சுரேஷ்குமார் இணையரின் திருமணத்தை நடத்தி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்வில் கழகத்தின் பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மாவட்ட கழக செயலாளர்கள் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, க.தேவராஜி எம்.எல்.ஏ, மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர்.எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம்.கதிர் ஆனந்த், சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.கார்த்திகேயன், திருமதி அமுலு விஜயன், ஜே.எல்.ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணைமேயர் மா.சுனில்குமார், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜமார்த்தாண்டன், மாநகர அமைப்பாளர் ரவிக்குமார் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர் கலந்து கொண்டனர்.

### தந்தை பெரியார்

பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்தாக வேண்டும். இந்தத் திருமணத்திற்கு நான் வந்திருப்பதற்கு முதல் காரணம் என்னவென்றால், நம் பொதுச் செயலாளர் அவர்கள்தான். கிட்டத்தட்ட 3 மாதத்துக்கு முன்பாக சட்டமன்றத்தில் இந்தத் திருமணத்திற்காக தேதி வாங்கி, தொடர்ந்து இதை என்னிடம் ஞாபகபடுத்திக்கொண்டே இருந்தவர் நம் பொதுச் செயலாளர் அவர்கள்தான். இந்தத் திருமண விழாவிற்கு என்னிடம் தேதி வாங்கி, மணமக்களை வாழ்த்துவதற்கான வாய்ப்பை அளித்த பொதுச்செயலாளர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த திருமண விழாவிற்கு, பொதுக்கூட்டம் நடைபெறுவதைப் போல நிறைய பேர் வந்து இருக்கிறீர்கள். நிறைய மகளிர் வந்து இருக்கிறீர்கள். ஒரு காலத்தில் பெண்கள் வீட்டைவிட்டே வெளியே வரமுடியாத சூழ்நிலை இருந்தது. இன்று, நிறைய மகளிர் வெளியே வந்து இருக்கிறீர்கள் என்றால், தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் எல்லாம் கண்ட கனவுதான் அதற்குக் காரணம். இதற்கெல்லாம் திட்டம் தீட்டியது நம் கலைஞர் அவர்கள்.

அவற்றைத் தொடர்ந்து செயல்வழியாக செய்துகாட்டிக்கொண்டு இருப்பவர் நம் தலைவர் அவர்கள். பெண்கள் படிக்க வேண்டும், பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று நம் தலைவர் அவர்கள் பல திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். அதையெல்லாம் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய கடமை உங்கள் ஒவ்வொருரிடமும் இருக்கிறது. நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.

நம் தலைவர் அவர்கள் நாளை முதல் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற முன்னெடுப்பைத் தொடங்க இருக்கிறார். ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் இருக்கின்ற 30 சதவிகித வாக்காளார்களை நம் கழகத்தில் இணைக்க வேண்டும் என்ற திட்டத்தைத் தீட்டி இருக்கிறார். இதையெல்லாம் செய்து முடிக்க வேண்டும் என்றால், இங்கு வந்து இருக்கின்ற நீங்கள் ஒவ்வொருவரும் நம் திராவிட மாடல் அரசின் தூதுவர்களாக செயல்பட்டு, அரசின் திட்டங்களை மக்களிடம் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மணமக்களுக்கு நம் தலைவர் அவர்கள் சொல்வதுபோல ஒரேயொரு வேண்டுகோள் தான். உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயரைச் சூட்ட வேண்டும் என்று கூறிக்கொண்டு, இங்கு வந்து இருக்கின்ற உங்கள் அத்தனைபேரின் சார்பாக மணமக்களை மீண்டும் வாழ்த்தி, கழகத்தின் பொதுச்செயலாளர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

கழகத்தின் பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் காந்தி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் நந்தகுமார், தேவராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் கார்த்திகேயன், அமுலு விஜயன், ஈஸ்வரப்பன், மாவட்ட அவைத் தலைவர் முகமது சகி, மாநகர மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜமார்த்தாண்டன், மாநகர அமைப்பாளர் ரவிக்குமார், சுந்தர் விஜி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## இளைஞர் அணி சமூக வலைதள மாவட்டத் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு,

## இராணிப்பேட்டை, திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு ஆகிய மாவட்டங்களுக்கான நேர்காணல்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டார்!















இயக்கத்தின் முதன்மை அணியாம் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார். அந்த வகையில், நேற்று முன்தினம் இராணிப் பேட்டை, திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை வடக்கு, திரு வண்ணாமலை தெற்கு மாவட்டங்களி லிருந்து மாவட்ட சமூக வலைதளத் துணை அமைப்பாளர் பொறுப்பு களுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் முன்னிலையில் நேர்காணல் செய்தார். வந்திருந்த வர்களின் சமூக வலைதளப் பக்கங்களைப் பார்வையிட்டு அவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்கள் கொண்டு வந்திருந்த ஆவணத் தொகுப்புகளையும் ஆய்வு செய்து, கழகப் பணி சிறக்க வாழ்த்தினார்.